பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .12.2020

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு டிசம்பர் மாதம் 30ம் நாள் ( 30.12.2020) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1305, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1306, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் டிசம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1307, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் டிசம்பர் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**தீர்மானம் எண்.1308, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.5 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19775/ஜே2/2019–3 நாள் 15.12.2020–ல் தெரிவித்துள்ளபடி 2018ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சி சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம் ) மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை V–ல் முடிதிருத்தும் நிலையங்கள், அழகு நிலையம், ஸ்பா மற்றும் மசாஜ் நிலையங்களுக்கு தொழில் உரிமையாணை கட்டணம் நிர்ணயம் செய்து உரிமையாணை வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்டுள்ளவாறு மேற்கண்ட நிறுவனங்களுக்கு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது.<br><table><tr><td>வ.எண்</td><td>தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டப்பிரிவு (அட்டவணை V)</td><td>உரிமையாணை கோரும் தொழில்</td><td>அளவு</td><td>உரிமையாணைக் காலம்</td><td>கட்டண விபரம்</td></tr><tr><td>1.</td><td>249</td><td>முடிதிருத்தகம்</td><td>1 இனம்</td><td>1வருடம்</td><td>300</td></tr><tr><td>2.</td><td>249</td><td>ஸ்பா</td><td>1 இனம்</td><td>1வருடம்</td><td>1000</td></tr><tr><td>3.</td><td>249</td><td>மசாஜ் பார்லர்</td><td>1 இனம்</td><td>1வருடம்</td><td>1000</td></tr></table>மேற்கண்டவாறு தொழில் உரிமையாணைக் கட்டணம் நிர்ணயம் செய்த விபரத்தினை தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் வெளியிட்டு அதன் விபரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டியுள்ளது.எனவே அவசர அவசியம் கருதி மேற்கண்டவாறு நிறுவனங்களுக்கு தொழில் உரிமம் நிர்ணயம் செய்திடவும் அதன் |

விபரத்தினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. விளம்பரத்திற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.1309, அனுமதிக்கப்பட்டது.**

---

பொருள்.6

நகர் மன்ற தீர்மான எண். நாள் 30.12.2020ன்படி இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பயனற்ற எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை தனியார் வாகனங்களை கொண்டு சிமிண்ட் ஆலைகளுக்கு அனுப்பி வைத்திட சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து 31.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ.எண் | இனவாரியான பணிகள் விபரம் | V.M.P Lorry Services பரமக்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி | Selvi steels & lorry Services Paramakudi என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1. | பொது சுகாதார பிரிவில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பயனற்ற எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்திட லாரி மூலம் அல்ரா டெக் சிமிண்ட் அரியலூர் மற்றும் டால்மியா சிமிண்ட் திருச்சி போன்ற நிறுவனங்களுக்கு கொண்டு செல்லுதல். | ரூ.1700 | ரூ.1500 |

வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்திட லாரி மூலம் சிமிண்ட் ஆலைகளுக்கு கொண்டு செல்ல குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Selvi steels & lorry Services பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பிளாஸ்டிக் கழிவுகளை இறுதியாக்கம் செய்திட லாரி மூலம் சிமிண்ட் ஆலைகளுக்கு கொண்டு செல்ல குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Selvi steels & lorry Services பரமக்குடி என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1310, அனுமதிக்கப்பட்டது.**

---

பொருள்.7

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைகளில் நகர் பகுதிகளில் மழைக்காலங்களில் கவனிக்க வேண்டிய முன் எச்சரிக்கை சம்மந்தமான விழிப்புணர்வு டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் சம்மந்தமான விழிப்புணர்வு, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகள் தரம் பிரித்து வழங்குவது மற்றும் கொரோனா சமூக இடைவெளி கடைபிடித்தல் சம்மந்தமான விழிப்புணர்வு அறிவுரைகளை பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் நகர்பகுதிகளில் அனைத்து வீடுகளிலும விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு கீழ்க்கண்ட விபரப்படி ஸ்டிக்கர்கள் அச்சடித்து வாங்க வேண்டியுள்ளது.

1.மழைக்காலங்களில் கவனிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் – 10000 எண்ணம்

2.டெங்கு தடுப்பு நடவடிக்கைக – 10000 எண்ணம்

3. கொரோனா சமூக இடைவெளி கடைபிடித்தல் – 10000 எண்ணம்

4.திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் தரம் பிரித்து வழங்குதல் – 10000 எண்ணம்

மேற்கண்ட விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை அச்சடித்து கொள்முதல் செய்ய பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதியும் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் 30.12.2020 அன்று கீழ்க்கண்ட மூன்று கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | அச்சடித்து கொள்முதல் செய்ய வேண்டிய ஸ்டிக்கர்கள் விபரம் | Kovilpatti small scale industries service industrial cooperative society ltd, IND. NO. TUTI 9 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | Arumbakkam Stationeries & Printing Service Industrial Cooperative Soceity ltd என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி | The Thoothukudi Dist HI Tech Printing and Allied Service industrial Cooperative Society ltd, IND NO TULL என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1. | மழைக்காலங்களில் கவனிக்க வேண்டியவை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் 10000 எண்ணம் | ரூ.15+18%GST | ரூ.15.50+18%GST | ரூ.16+18%GST |
| 2. | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் 10000 எண்ணம் | ரூ.15+18%GST | ரூ.15.50+18%GST | ரூ.16+18%GST |
| 3. | கொரோனா பற்றிய சமூக இடைவெளி கடைபிடித்தல் அவசியம் குறித்த ஸ்டிக்கர்கள் 10000 எண்ணம் | ரூ.15+18%GST | ரூ.15.50+18%GST | ரூ.16+18%GST |
| 3. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காதகுப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் 10000 எண்ணம் | ரூ.15+18%GST | ரூ.15.50+18%GST | ரூ.16+18%GST |

வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய Kovilpatti small scale industries service industrial cooperative society ltd, IND. NO. TUTI 9 என்ற கூட்டுறவு நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட நகர் மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குறைந்த தொகைக்கு விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி வழங்கிய Kovilpatti small scale industries service industrial cooperative society ltd, IND. NO. TUTI 9 என்ற கூட்டுறவு நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1311, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.8

பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்18ல் அமைந்துள்ள நவீன மீன்மார்க்கெட்டில் உள்ள திறந்த வெளி கடைகளுக்கு 23.12.2020ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரத்தின்படி வரப்பெற்றுள்ள ஏலதாரர்களின் ஏலக்கேள்வி தொகையினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலதாரர்களின் பெயர் | பொது ஏலக்கேள்வி தொகை | |
|---|---|---|---|
| | | கூடுதல் | குறைவு |
| 1. | கு.தர்மராஜன் | 0 | 521000/– |
| 2. | சேதுபதி பாண்டியன் | 525000/– | |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மேற்கண்ட இணத்திற்கு பொது ஏலக்கேள்வி கோரிய திரு.கு.தர்மராஜன் என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ–521000/–விட திரு.சேதுபதிபாண்டியன் என்பவரது உச்ச ஏலக் கேள்வி தொகை ரூ.5,25000/–ஐ மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1312, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.9

பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.18ல் அமைந்துள்ள நவீன மீன்கடைகளுக்கு 23.12.2020ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட பிபரத்தின்படி வரப்பெற்றுள்ள பொது ஏலக்கேள்வி கோரிய குத்தகைதாரர்களின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | கடைகளின் எண். | குத்தகைதாரர்களின் பெயர் | ஏலக்கேள்வி | |
|---|---|---|---|---|
| | | | கூடுதல் | குறைவு |
| 1. | 1 | 1.டி.இளங்கதிர் | 2150 | 0 |
| | | 2.எம்.எம்.இராமச்சந்திரன் | 0 | 2050 |
| 2. | 2. | 1.டி.இளங்கதிர் | 0 | 2140 |
| | | 2.எம்.செல்லப்பாண்டி | 2150 | 0 |
| 3. | 3. | 1.டி.சரோஜா | 0 | 2125 |
| | | 2.டி.நாகர்ச்சுணன் | 2150 | 0 |
| 4. | 4. | 1.கே.விவேகானந்தன் | 0 | 2125 |
| | | 2.என்.எம்.மணிபாரதி | 2150 | 0 |
| 5. | 6. | 1.ஆர்.குணசேகரன் | 2150 | 0 |
| | | 2.கே.செந்தில்குமார் | 0 | 2130 |
| 6. | 7. | 1.ஏ.கார்த்திக் | 2150 | 0 |
| | | 2.தமிழ்செல்வன் | 0 | 2125 |
| 7. | 8. | 1.ஏ.கார்த்திக் | 2150 | 0 |
| | | 2.தமிழ்செல்வன் | 0 | 2100 |
| 8. | 9. | 1.மா.கோபிநாத் | 2150 | 0 |
| | | 2.ஆர்.குமரதாசன் | 0 | 2135 |
| 9. | 10. | 1.ப.அமுதவள்ளி | 0 | 2125 |
| | | 2.ந.நம்புராஜன் | 2150 | 0 |
| 10. | 11. | 1.ஆர்.கலையரசன் | 0 | 2125 |
| | | 2.எம்.கணேசன் | 2150 | 0 |
| 11. | 12. | 1.கே.மகாலிங்கம் | 0 | 2125 |
| | | 2.எஸ்.முருகேசன் | 2150 | 0 |
| 12. | 13. | 1.எம்.ஜெயசீலசேதுபதி | 2150 | 0 |
| | | 2.எஸ்.தினேஷ் | 0 | 2125 |
| 13. | 14. | 1.எம்.கார்த்திகேயன் | 2150 | 0 |
| | | 2.எஸ்.கந்தசாமி | 0 | 2125 |
| 14. | 15. | 1.என்.முத்திருளன் | 2150 | 0 |
| | | 2.கே.தவமணி | 0 | 2050 |
| | | 3.எஸ்.கந்தசாமி | 0 | 2060 |
| | | 4.வி.நந்தகுமார் | 0 | 2140 |
| 15. | 16. | 1.எம்.ஜெயசீல சேதுபதி | 0 | 4000 |
| | | 2.கே.குமரேஷ்வரி | 0 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3.வி.ஏ.கே.கார்த்திகேயன் | 5225 | 0 |
| | | 4.எஸ்.நாகராஜன் | 0 | 5200 |
| 16. | 17. | 1.எஸ்.நாகராஜன் | 0 | 6100 |
| | | 2.எல்.எம்.மணிகண்டன் | 7500 | 0 |
| | | 3.குணசேகரன் | 0 | 7000 |
| | | 4.ஜி.ஆர்.ரவீந்திரன் | 0 | 0 |
| 17. | 18. | 1.எஸ்.நாகராஜன் | 0 | 6100 |
| | | 2.ஏ.ஜெயக்குமார் | 0 | 3500 |
| | | 3.எம்.எம்.இராமச்சந்திரன் | 9000 | 0 |
| | | 4.எம்.பிரபு | 0 | 8950 |
| 18. | 19. | 1.ஏ.முஸாக்கனி | 0 | 9000 |
| | | 2.ஆர்.கலையரசன் | 0 | 8500 |
| | | 3.எம்.கணேசன் | 9100 | 0 |
| 19. | 20. | 1.அருண்மொழித்தேவர் | 0 | 6600 |
| | | 2.சேகர் | 0 | 5600 |
| | | 3.கே.விவேகானந்தன் | 0 | 5500 |
| | | 4.என்.எம்.மணிபாரதி | 6700 | 0 |
| | | 5.ஏ.முஸாக்கனி | 0 | 5100 |
| 20. | 21. | 1.குணசேகரன் | 5100 | 0 |
| | | 2.ஜி.ஆர்.ரவிச்சந்திரன் | 0 | 0 |
| 21. | 22 | 1.மீனாள் முத்துக்கண்ணு | 0 | 5300 |
| | | 2.பி.சுரேஷ் | 0 | 5200 |
| | | 3.பி.மாரிமுத்து | 5500 | 0 |
| | | 4.எம்.சக்திவேல் | 0 | 5150 |
| 22. | 23. | 1.மா.கோபிநாத் | 3100 | 0 |
| | | 2.ஆர்.குமரதாசன் | 0 | 3050 |
| 23. | 24. | 1.கார்த்திக்குமார் | 0 | 9500 |
| | | 2.முத்துக்கண்ணு | 0 | 10000 |
| | | 3.எஸ்.திசைநாதன் | 10100 | 0 |
| 24 | 25. | 1.பி.சுரேஷ் | 0 | 4050 |
| | | 2.பி.மாரிமுத்து | 4100 | 0 |
| 25 | 26. | 1.ஆர்.கலையரசன் | 3200 | 0 |
| | | 2.எம்.கணேசன் | 0 | 3100 |
| 26 | 27. | 1.ஆர்.பிரபு | 0 | 3050 |
| | | 2.ருபிகதிரவன் | 3100 | 0 |
| 27 | 28. | 1.முத்திருளன் | 6100 | 0 |
| | | 2.கே.தவமணி | 0 | 6050 |
| | | 3.எம்கருணாகரன் | 0 | 6075 |

**அலுவலகக் குறிப்பு**

மேற்கண்ட கடைகளுக்கு வரப்பெற்றுள்ள உச்ச ஏலக்கேள்வி கோரிய குத்தகைதாரர்களின் உச்சவரம்பு ஏலக்கேள்வி தொகைகளை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1313, அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| பொருள்.10 | பரமக்குடி நகரம் திரு.இருளன் என்பவர் நகராட்சி பகுதியில் உள்ள ஊரணி மற்றும் குட்டை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக்கிளையில வழக்கு எண் 17401/2020 வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கின் விசாரணை உயர்நீதிமன்றத்தில் வரவிருப்பதால் ஆணையாளர் சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்த திரு.கண்ணன் வழக்கறிஞர் அவர்களை அனுமதக்கவும் வழக்கிற்கான செலவு தொகையினை அலுவலகத்திலிருந்து செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுறிது. |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.1314, அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு பாதிப்புகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளதால், டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும் பொருட்டு டெங்கு காய்ச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகள், மார்க்கெட் பகுதிகள் மற்றும் பொது இடங்களில் பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்வற்கும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் தேவைப்படும் கிருமி நாசினியான நீர்த்த சுண்ணாம்புத்தூள் அலுவலக இருப்பில் மிகக்குறைவாக உள்ளதால் கீழ்க்கண்ட அளவுகளில் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது.<br>1.நீர்த்த சுண்ணாம்புத்தூள் 25000 கிலோ<br>மேற்கண்ட கிருமி நாசினியினை டெங்கு நோய் தடுப்பின் முக்கியத்துவம் கருதி ரூ.2.50 இலட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>ரூ.2.50லட்சம் உத்தேச செலவினத்தில் சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்<br>3.செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.1315, அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சிக்கு சொந்தமான பேரூந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக புதிக கடை எண்.2 வ.வி.எண்.134/40002 திரு.எம்.கோபி என்பவர் பெயரில் இயங்கி வருகிறது. மனுதாரர் திரு.கோபி என்பவருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் தனது அனுபோதகரான திரு.ஜெகதீசன் என்பவருக்கு பெயர் மாற்றம் செய்ய வழக்கறிஞரின் ஒப்புதல் வாயிலாக விண்ணப்பம் செய்துள்ளார். மேற்கண்ட விண்ணப்பத்தின்படி அரசாணை நிலை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (நி.நி4) நாள் 03.07.2007ன்படி அனுபோதகர்களுக்கு ஒருமுறை மட்டும் பெயர் மாற்றம் செய்து கொள்ளவும் 12 மாத வாடகைக்கு சமமான தொகையை பெயர் மாற்ற கட்டணம் செலுத்த குறிப்பிடப்பட்டுள்ளதின்படி பெயர் மாற்ற கட்டணம் ரூ.42528/— முன் வைப்புத் தொகை ரூ.45000/— மற்றும் விண்ணப்பக்கட்டணம் ரூ.500/—ம் செலுத்தப்பட்டுள்ளதால் திரு.எம்.கோபி பெயரிலிருந்து திரு.பி.ஜெகதீசன் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>12 மாத பெயர் மாற்ற கட்டணம் மற்றும் முன் வைப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளதால் பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மானம் எண்.1316, அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள்.13</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த வாறுகால் மற்றும் சிறுபாலங்களை பழுது நீக்கும் பணிக்கு 31.12.2020ம் தேதி அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.<br>
<table>
<tr><td>1</td><td>திரு. ஐ.கிருஷ்ணமூர்த்தி, ஒப்பந்ததாரா்</td><td>0.04% மதிப்பீட்டு ரேட்டை விட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. பி.சசிவர்ணம், ஒப்பந்ததாரர்</td><td>0.86% மதிப்பீட்டு ரேட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u> –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஐ.கிருஷ்ணமூர்த்தி ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.04% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
</table>

**தீர்மானம் எண்.1317, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.14

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண்.(D) 303 நாள் 09.09.2020 ன் கீழ் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.100.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 07.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 14.12.2020அன்று ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு குழு முலம் தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்னர் 17.12.2020 அன்று விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ.லட்சத் தில் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | சிப்பம்–I<br>மலையான் குடியிருப்பு கிழக்கு மெயின் ரோடு, குறுக்குத் தெருக்கள் , வடக்கு மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைக்கும் பணி செய்தல். வார்டு எண் . 8 | 100.00 | 1) திரு. பி.சுப்பிரமணியன், ஒப்பந்ததாரர் தேவகோட்டை 4,96 % கூடுதல்<br>2) திரு.கே.ஓ.பெரியகருப்பன் (எ) பாலு ஒப்பந்ததாரர் ஓரியனேந்தல் 6.48 % கூடுதல் |

**<u>அலுவலகக்குறிப்பு –</u>**

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி.சுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4,96% கூடுதலாகவும், கே.ஓ.பெரியகருப்பன் (எ) பாலு கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 6.48% கூடுதலாகவும் வரப்பெற்றுள்ளது. இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.சுப்பிரமணியன்,ஒப்பந்ததாரரா(L1) விலைக்குறைப்பு செய்து தரக்கோரி வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திரு.சி.சுப்பிரமணியன் ஒப்பந்ததாரர் 4.96 சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி.சுப்பிரமணியன், (மதிப்பீட்டு ரேட்டைவிட 4.96% கூடுத ல்) ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1318, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.15

இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண்.(D) 303 நாள் 09.09.2020 ன் கீழ் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 07.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 14.12.2020அன்று ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு குழு முலம் தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்னர் 17.12.2020 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டு ரூ.லட்சத் தில் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | சிப்பம்–II<br>ஜீவா நகர் வடக்கு மெயின் ரோடு , குறுக்குத் | 200.00 | 1) திருமதி. ஐ.குழந்தையம்மாள், |

| | | | |
|---|---|---|---|
| | தெரு பெருந்தேவி நகர், முனியாண்டி கோவில் ரோடு, வரதராஜபெருமாள் காலனி, மற்றும் பர்மாகாலனி குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைக்கும் பணி செய்தல். வார்டு எண். 8 | | ஒப்பந்ததாரர் பரமக்குடி 4.97 % கூடுதல்<br><br>2) திரு.ஏ.ஞானபிரகாசம் ஒப்பந்ததாரர் பரமக்குடி 11.59 % கூடுதல் |

**<u>அலுவலகக்குறிப்பு –</u>**

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.97% கூடுதலாகவும், திரு.ஏ.ஞானபிரகாசம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 11.59 % கூடுதலாகவும் வரப்பெற்றுள்ளது, இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரரை(L1) விலைக்குறைப்பு செய்து தரக்கோரி வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திருமதி. ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.97 சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. ஐ.குழந்தையம்மாள், (மதிப்பீட்டு ரேட்டைவிட 4.97% கூடுதல்) ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1319, அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr><td>பொருள்.16</td><td>
இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண்.(D) 303 நாள் 09.09.2020 ன் கீழ் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 07.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 14.12.2020அன்று ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு குழு முலம் தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்னர்17.12.2020 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td>1</td><td>சிப்பம்–III<br>வைகை நகர் குறுக்குத் தெருக்கள், புதுநகர் மேற்கு மெயின் ரோடு, குறுக்குத் தெருக்கள் மற்றும் தேவராஜ நகர் குறுக்குத் தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர் இயந்திரம் மூலம் தார் தளம் அமைக்கும் பணி செய்தல். வார்டு எண். 1</td><td>100.00</td><td>1) திருமதி. ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் பரமக்குடி 4.98% கூடுதல்<br>2) திரு.ஏ.ஞானபிரகாசம் ஒப்பந்ததாரர் பரமக்குடி 10.07% கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு –</u><br>
மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி. ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.98% கூடுதலாகவும், திரு.ஏ.ஞானபிரகாசம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 10.07 % கூடுதலாகவும், வரப்பெற்றுள்ளது, இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி.ஐ.குழந்தையம்மாள் ,ஒப்பந்ததாரரை(L1) விலைக்குறைப்பு செய்து தரக்கோரி வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திருமதி. ஐ.குழந்தையம்மாள், ஒப்பந்ததாரர் 4.98 சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. ஐ.குழந்தையம்மாள், (மதிப்பீட்டு ரேட்டைவிட 4.98% கூடுதல்) ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
தீர்மானம் எண்.1320, அனுமதிக்கப்பட்டது.
</td></tr>
<tr><td>பொருள்.17</td><td>
இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21ன் கீழ் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA2) அரசாணை எண்.(D) 303 நாள் 09.09.2020 ன் கீழ் கீழ்க்கண்டவாறு சாலைப்பணி ரூ.200.00 லட்சம் மதிப்பீட்டில் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணி மேற்கொள்வதற்கு 07.12.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 14.12.2020அன்று ஒப்பந்தப்புள்ளி கலந்தாய்வு குழு முலம் தகுதிகாண் பட்டியல் தயார் செய்யப்பட்டு பின்னர் 17.12.2020 விலைப்பட்டியல் அடங்கிய உறை திறக்கப்பட்டதில், கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் விபரம்</th><th>மதிப்பீட்டு ரூ.லட்சத்தில்</th><th>ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு சதவீதம் கூடுதல் / குறைவு</th></tr>
<tr><td>1</td><td>சிப்பம்–IV<br>மலையான் குடியிருப்பு குறுக்குத் தெரு, பாலன்நகர், முல்லைநகர்மற்றும் காந்தி நகர், குறுக்குத்தெருக்களில் மழைநீர் வடிகால் அமைத்து பேவர் கல் தளம் அமைக்கும் பணி செய்தல் வார்டு.</td><td>100.00</td><td>1) திரு. கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் சிவகங்கை 4.96% கூடுதல்<br>2) திரு.டி.ராமர் ஒப்பந்ததாரர் மதுரை</td></tr>
</table>
</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 8, 27, 24, 2. | | 6.93% கூடுதல் |

<u>**அலுவலகக்குறிப்பு –**</u>

மேற்கண்டவாறு பெறப்பட்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.செந்தில்குமார், ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 4.96 % கூடுதலாகவும், திரு. டி.ராமர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டை விட 6.93% கூடுதலாகவும், வரப்பெற்றுள்ளது, இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.செந்தில்குமார்,.,ஒப்பந்ததாரரை(L1) விலைக்குறைப்பு செய்து தரக்கோரி வரைவு அனுப்பப்பட்டதில் கட்டுமான பொருட்கள் மற்றும் பணியாளர்களின் கூலி அதிகமாக உள்ளதால் திரு. கே.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் 4.96 சதவீதத்திற்கு குறைவாக செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி திட்டப்பணியை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடிக்க வேண்டி உள்ளதாலும், பொறியியல் கையேடு பத்தி எண்.27.1 மற்றும் 27.2ன்படி நகர்மன்றத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டு இருப்பதாலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. கே.செந்தில்குமார், (மதிப்பீட்டு ரேட்டைவிட 4.98% கூடுத ல்) ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1321, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.18

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2020–2021ன் கீழ் பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.நி.சதன்பிரபாகர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.ஆர்4/3197/2020 நாள் 08.12.2020ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் இராஜா சேதுபதி அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் வாலிபால் மற்றும் பேஸ்கட் பால் மைதானத்தில் கேலரி அமைக்கும் பணிக்கும் ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய 31.12.2020 அன்று முதன் முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுதொகையைவிட கூடுதல்/ குறைவு |
|---|---|---|
| 1. | திரு. பி.சசிவர்ணம் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.23% மதிப்பீட்டு விலையை விட குறைவு |
| 2. | திரு.வி.மேகவர்ணம் ஒப்பந்ததாரர், பரமக்குடி | 0.86% மதிப்பீட்டு விலையை விட கூடுதல் |

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.23% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி.சசிவர்ணம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மானம் எண்.1322, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.19

பரமக்குடி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் பொருட்டு நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அரைத்து தொட்டிகளில் நிரப்பு அறிவியல் முறைப்படி உரம் தயாரிக்க சந்தைப்பேட்டை வடக்குப்பகுதி, தெற்குபகுதி மற்றும் ஜீவா நகர் பகுதிகளில் நுண்ம உரக்கூட மையங்கள் அமைக்கப்பட்டு உரம் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. தற்போது சந்தைப்பேட்டை பகுதியில் உள்ள இரண்டு நுண்ம உரக்கூட மையங்களில் உள்ள Shredding Machineல் ஏற்பட்ட பழுதுகள் காரணமாக குப்பைகளை உரமாக்கும் பணிகள் தடைப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதுகளை சரி செய்து தருமாறு பொது சுகாதாரப்பிரிவினர் தெரிவித்ததைத் தொடர்ந்து, மேற்காணும் திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தைக் கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 23.01.2019ம் தேதிய சுற்றறிக்கையின் படியும், திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொய்வின்றி சீராக நடைபெற நுண்ம உரக்கூட மையங்களில் உள்ள அரைக்கும் இயந்திரங்களை பழுது நீக்கம் செய்யம் மற்றும் உதிரி பாகங்கள் புதிதாக பொருத்தவும் ஆண்டு பராமரிப்பு மூலம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள

உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6,00,000/—க்கு லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.மேலும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1323, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.20

பரமக்குடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிவானந்தபுரம் நகராட்சி தொடக்கப்பள்ளி, காட்டுப்பரமக்குடி நகராட்சி தொடக்கப்பள்ளி, சேதுபதி நகராட்சி தொடக்கப்பள்ளி, மேலச்சத்திரம் நகராட்சி தொடக்கப்பள்ளி, மஞ்சள்பட்டிணம் நகராட்சி தொடக்கப்பள்ளி, எமனேஸ்வரம் நகராட்சி தொடக்கப்பள்ளி ஜீவா நகர் நகராட்சி தொடக்கப்பள்ளி , காந்தி நகர் நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் எமனேஸ்வரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி ஆகிய 9 பள்ளிகள் நகராட்சி நிர்வாகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. அப்பள்ளியின் தலைமை ஆசிரியர்கள் தங்கள் பள்ளிகளில் தளம் அமைத்தல், தட்டோடு பதித்தல், சுற்றுச்சுவர் கட்டும் பணிகள், கதவு ஜன்னல் பழுது நீக்கும் பணிகள், பூச்சுப்பணிகள், கான்கிரிட் பணிகள் மற்றும் பெயிண்டிங் பணிகள் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதன் பேரில் ஆணையாளர் நேரடியாக பார்வையிட்டு மேற்படி பணிகளை சரி செய்ய உரிய மதிப்பீடுகள் தயார் செய்ய அறிவுறுத்தியதின் பேரில் கீழ்க்கண்ட விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ. எண்.** | **பணியின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | பரமக்குடி பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |
| 2 | எமனேஸ்வரம் பகுதியில் உள்ள நகராட்சி பள்ளிகளில் மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 9.90 |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1324, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.21

பரமக்குடி நகராட்சி வார்டு எண்.1க்குட்பட்ட தெ.புதுக்கோட்டை சாலை சந்திப்பில் இருந்து சுமார் 120 மீ தொலைவில் வ.உ.சி.பள்ளி அமைந்துள்ளதுது இப்பள்ளியில் சுமார் 800 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். மேற்காணும் பள்ளிக்கு செல்லும் அணுகு சாலை மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்திற்கு மிகவும் இடையூராக உள்ளது. மேலும் மழைக்காலங்களில் அதிகமாக தண்ணீர் தேங்கி இருப்பதால் மாணவ மாணவியர்கள் நடந்து செல்வதற்கே மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்படி பள்ளிக்குச் செல்லும் அணுகு சாலையை புதிய சாலையாக அமைத்து தரக்கோரி அப்பகுதி வாழ் பொதுமக்கள் கோரியதைத் தொடர்ந்து பள்ளிக்குழந்தைகளின் நகலினை கருத்தில் கொண்டு அப்பள்ளி அணுகு சாலையில் புதிய பேவர் பிளாக் சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.920000/—க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1325, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.22

பரமக்குடி நகராட்சி, **15—வது** மத்திய நிதிக்குழு மானியத் திட்டத்தின் கீழ் **2020—2021**ம் ஆண்டுக்கு முதல் மற்றும் இரண்டாவது தவணைத் தொகையாக ரூ.**250.66** ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையரகத்திலிருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் குடிநீர் விநியோகம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை தலைப்பின் கீழ் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகள் எடுத்துச் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர்கள் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Proportionate cost for Supply and erection of 30 TPD Centralised Incinerator with Infrastructure facilities for Paramakudi Municipality (Ramanathapuram,Rameswaram,Paramakudi,Keelakkarai) | ரூ.148.80 |
| 2. | Supply and Installation of Shredding machine for exisiting Micro compost centers at Paramakudi Municipality | ரூ.36.00 |
| 3. | Supply and Installation of Bailing Press machine for Resource recovery center at Paramakudi Municipality | ரூ.6.00 |
| 4. | Construction of 1.00 Lakh litre capacity of OHT 12 m Staging with Pumping main arrangements at Gandhi Nagar in Ward No:2 | ரூ.30.00 |
| 5. | Construction of 1.00 Lakh litre capacity of OHT 12 m Staging with Pumping main arrangements at Pudhu Nagar in Ward No:01 | ரூ.30.00 |
| | **மொத்தம்** | **ரூ.250.80** |

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளில் வரிசை எண்.1ல் உள்ள ரூ.148.80 இலட்சத்திற்கு தேர்வு செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களிடமும் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பலாம்.
3. மீதம் உள்ள பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி பெறலாம்.
4. இத்திட்டப்பணியின் மானியத் தொகை போக கூடுதல் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1326, அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.23

பரமக்குடி நகராட்சியில் தினசரி 35 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரமாகின்றன. அதில் தரம் பிரிக்கப்பட்ட 21 மெட்ரிக் டன் அளவிலான மக்கும் குப்பைகள் (Bio degradable Waste) நகரின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 3 எண்ணிக்கையிலான பசுமை உரக்குடில் (Micro Composting Centre) மற்றும் 21 எண்ணிக்கையிலான சிறிய வகை உரக்குடிலிகள் மூலமாக (Onsite Composting centre) கையாளப்பட்டு உரமாக்கப்படுகின்றன. இதுதவிர சுமார் 3 மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகள் மறு சுழற்சி அடிப்படையில் பயன்படுத்தத்தக்க உலர் கழிவுகள் (Recyclable dry waste) பிரித்தெடுக்கப்பட்டு மறு சுழற்சி செய்வதற்காக விற்பனை செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மறு சுழற்சிக்கு பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) சுமார் 8 மெட்ரிக் அளவுள்ள டன் உலர் கழிவுகள் எரிபொருளாகப் பயன்படுத்த வேண்டி **M/s. Ultratech / M/s. Dalmia,** சிமெண்ட் நிறுவனத்திற்குச் சொந்தமான சிமெண்ட் ஆலைக்கு அனுப்பப்பட்டு வந்தது. மேற்படி நகராட்சியால் அனுப்பப்பட்டுவரும் குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்த இயலாதவை, ஈரமாக உள்ளது மற்றும் மேற்படி உலர் கழிவுகளை சரியாக தரம் பிரிக்கப்படவில்லை உள்ளிட்ட இதர காரணங்களை தெரிவித்து சிமெண்ட் ஆலைகள் வாங்க மறுக்கும் நிலையில் மறுபடியும் குப்பைக் கிடங்கிலேயே மீண்டும் சேகரம் செய்யும் நிலை ஏற்படுகிறது. இது தவிர நகரை விட்டு வெகு தூரத்தில் அமைந்துள்ள மேற்படி தனியார் சிமெண்ட் ஆலைகளுக்கு பயன்படுத்த இயலாத விற்பனை செய்ய இயலாத உலர் கழிவுகளை கொண்டு செல்ல லாரி வாடகையாக ஒரு டன்னுக்கு சுமார் ரூ.5000/– வரை செலவிட நேர்வதால் நகராட்சிக்கு கூடுதல் செலவினம் ஏற்படுகின்றது. மேற்படி பயன்படுத்த இயலாத மற்றும் விற்பனை செய்ய இயலாத (Non Saleable Dry Waste) உலர் கழிவுகளை சிமெண்ட் ஆலைகளுக்கு கொண்டு சென்று எரியூட்டுவதற்குப் பதிலாக நகராட்சி மூலம் புதிதாக எரியூட்டும் உலை நிறுவி மேற்படி குப்பைகளை எரிபொருளாக பயன்படுத்தி விஞ்ஞான ரீதியில் கையாள (Dry Waste Incinerator) வேண்டிய நிலை உள்ளது. மேலும், இத்திட்டத்தினை செயல்படுத்த கூடுதல் தொகை செலவிட நேரிடும் என்பதால்

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகராட்சியையொட்டி அமைந்துள்ள இராமநாதபுரம், இராமேஸ்வரம் மற்றும் கீழக்கரை நகராட்சிகளில் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளையும் சேர்த்து கையாள புதிதாக தினசரி 30 மெட்ரிக்டன் கையாளத்தக்க வகையில் ஒரு எரியூட்டும் ஆலை (Dry Waste Generator) அமைக்கவும் மேற்படி திட்டத்தினை தனியார் பங்களிப்பு (Public Private Partnership mode) அடிப்படையில் செயல்படுத்தவும் அதற்கான திட்ட மதிப்பீடு ரூ.372.00 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் செலவினத்தை கீழ்க்கண்ட வகையில் இத்திட்டதின் கீழ் பங்கெடுத்துக்கொள்ளும் நகராட்சிகள் பகிர்ந்து கொள்ளத்தக்க வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **நகராட்சியின் பெயர்** | **திட்ட மதிப்பீடு இலட்சத்தில்** | **பங்குத் தொகை இலட்சத்தில்** |
|---|---|---|---|
| 1 | இராமநாதபுரம் | ரூ.350.00 | 85.56 |
| 2 | பரமக்குடி | | 148.80 |
| 3 | இராமேஸ்வரம் | | 63.24 |
| 4 | கீழக்கரை | | 74.40 |
| | **மொத்தம்** | | **372.00** |

மேலும், மேற்படி எரியூட்டு உலை நிறுவி உலையை இயக்குதல் மற்றும் தொடர் பராமரிப்பு பணியினை இராமநாதபுரம் நகராட்சியின் கண்காணிப்பில் மேற்கொள்ளவும், மேற்படி மாதாந்திர பராமரிப்பு கட்டணத்தை விகிதாச்சார முறையில் பகிர்ந்து செலுத்தி இத்திட்டத்தினை செயல்படுத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மேற்படி திட்டத்தினை மத்திய அரசின் 15–வது நிதிக்குழு மான்ய தொகையிலிருந்து செயல்படுத்தவும் இராமநாதபுரம், இராமேஸ்வரம் மற்றும் கீழக்கரை நகராட்சிகள் விகிதாச்சார அடிப்படையில் செலவினத்தை பகிர்ந்து கொள்ளவும், தொடர் பராமரிப்னை தனியார் மூலம் இராமநாதபுரம் நகராட்சி கண்காணிப்பில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்.1327, அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி